# 10

# “தேவனுடைய சபை”

*“தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்த வான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது ” (1 கொரி. 1:1, 2).*

இரு மனிதர்களிடையே தக்க வகையிலான புரிந்து கொள்ளுதல் என்பது திட்டவட்டமான தன்மை மற்றும் பெயர் குறிப்பிடுதல் ஆகியவற்றைக் கேட்டுக் கொள்ளுகின்றது. காலத்தின் தொடக்கத்தில் மனிதனுக்குத் தேவன் அளித்த மொழிக்கட்டமைப்பானது வேறுபடுத்தும் மற்றும் அடையாளம் இடும் துறையாக இருந்தது. படைக்கப்பட்ட உலகில் இருந்த விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பெயரிடுதல் என்பதே தேவன் ஆதாமுக்குக் கொடுத்த முதல் பணிப் பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது: “தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவை களுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று” (ஆதி. 2:19). மனிதன் தன் மொழித்திறனைத் தானே உண்டாக்கவில்லை; மாறாக, படைக்கப்பட்ட போது மனிதனுக்கு மொழித்திறனும், தனக்கு முன் கொண்டு வரப்பட்ட விலங்குகளுக்குப் பெயரிடும் திறனும் கொடையாக அளிக்கப்பட்டது.

நமது அடையாளப்படுத்துதல்களில் நாம் குறைபாடுள்ளவர்களாய் இருக்கையில், ஒருவர் மற்றொருவருடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல் என்பது அதிகக் கடினமாகிறது என்பது பொதுவான விதியாக உள்ளது. இதற்கு நேர் எதிரில், நமது குறிப்பிடுதல்களில் நாம் அதிகம் சரியாகவும் நம்பத் தக்க வகையிலும் இருக்கையில், மற்றவர்களுடன் செயல்திறன்மிக்க வகையிலும், வெற்றிமிக்க வகையிலும் செய்தித் தொடர்பு கொள்ள முடிகின்றது.

வகைப்படுத்துதலும், குறிப்பிடுதலும் நமது உரையாடல்களின்

*தலைப்புகளைச் சுட்டிக் காட்டுவதில் உதவி செய்வது மட்டுமின்றி, விவாதிக்கப்படும் பொருள், இடம் அல்லது நபரின் உட்கண்ணோட்டத் திற்கான பலகணிகளாகவும் செயல்படுகின்றன. நாம், "இது செல்வத்தின் பையன்" என்று கூறினால், அந்தக் குறிப்பானது பையனுக்கும் அவனது தந்தைக்கும் இடையில் உள்ள உறவுமுறையை விளக்குகின்றது, மற்றும் அது அவ்விருவரின் தோராயமான வயதுகளையும் தெரிவிக்கின்றது. மகன் பையனாக இருக்கையில், செல்வம் என்பவர் ஒரு வயது ஆன மனிதராய் இருக்கின்றார்.*

*தேவன் தம்முடைய சித்தத்தை நமக்கு அளிப்பதற்குத் தனிச் சிறப்பான பல விளக்கப்படுத்துதல்களைத் தம்முடைய வசனத்தில் பயன்படுத்தி யுள்ளார். ஏவுதல் பெற்ற அவருடைய வெளிப்பாடுகளின் பகுதியாக உள்ள அவருடைய விவரிப்புச் சொற்றொடர்கள் எப்பொழுதும் ஏற்புடைய தாகவும் மிகச் சரியானதாகவும் உள்ளன. ஆகையால், அவை ஒவ்வொன்றும் கவனமாகச் சிந்திக்கத் தக்கவைகளாக உள்ளன.*

*சபைக்குப் பரிசுத்த ஆவியானவர் தேர்ந்து கொண்ட சொற்றொடர்கள் நமக்குச் சிறப்பான ஆர்வமுடையவைகளாய் உள்ளன. அவைகள் சபையின் கருத்து மற்றும் இயல்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வழிகளாய் உள்ளன. சபையின் பண்பு பற்றி தேவனுடைய வசனத்திலிருந்து ஒவ்வொரு சத்தியத்தையும் பிடித்துக் கொள்வதற்காக, தேவன் பயன்படுத்தியுள்ள ஒவ்வொரு குறிப்பையும் நாம் முற்றிலுமாகப் படித்து உணர வேண்டும்.*

*"தேவனுடைய சபை" என்ற ஆலோசனைச் சொற்றொடரானது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற குறிப்பாக உள்ளது. இது மிக முக்கியமான பண்பாக உள்ளது, ஏனெனில் இது பரிசுத்த ஆவியானவரால் பன்னிரண்டு முறை - "தேவனுடைய சபை" என்று எட்டு முறைகளும், "தேவனுடைய சபைகள்" என்று மூன்று முறைகளும்,"ஜீவனுள்ள தேவனுடைய சபை" என்று ஒரு முறையும் - பயன்படுத்தப்படுகின்றது.[1]*

*விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைக் கிறிஸ்தவர்கள் உண்ணுதல் பற்றிப் பவுல் விவாதிக்கையில், அவர், "நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" (1 கொரி. 10:33) என்று புத்தி கூறினார். மற்றும் அவர், கர்த்தருடைய பந்தியைக் கொரிந்தியர்கள் தவறாகப் பயன்படுத்துவதைக் குறித்து, "புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனு டைய சபையை அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்து கிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனா? புகழேன்" (1 கொரி. 11:22) என்றும் எழுதினார். "நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப் படுத்தி, அதைப் பாழாக்கி ..." (கலா. 1:13) என்று கூறியதன் மூலம் பவுல் தம் மனமாற்றத்திற்கு முன்பு தாம் வாழ்ந்திருந்த வாழ்க்கையைப் பற்றிப் புலம்பினார். மூப்பர்களைப் பற்றிப் பவுல். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1 தீமோ. 3:5) என்று கூறினார்.*

பரிசுத்த ஆவியானவர் தமது தெய்வீக வெளிப்படுத்துதலில் இந்தச் சொற்றொடரானது ஒளி வீசும் சொற்றொடராய் இருக்க வேண்டும் என்று நோக்கங் கொண்டார் என்பது தெளிவு. "தேவனுடைய சபை" என்ற சொற்றொடரானது அதன் மேம்போக்கான கருத்து மற்றும் உட்கருத்து ஆகியவற்றில் சபையானது தேவனுடன் நிலைநிறுத்தும் வலிவார்ந்த உறவைச் சுட்டிக்காட்டுகின்றது.

## இதன் தொடக்கத்திற்குள்ளாக

முதலாவது, இது நமக்கு சபையின் தொடக்கம் பற்றிய உட்கருத்தைத் தருகின்றது. சபையை இருக்கும் நிலைக்குக் கொண்டு வர, தேவன் சிலவற்றைச் செய்யவேண்டியிருந்தது என்ற சத்தியத்தை இது நமக்கு நினைவூட்டுகின்றது.

தேவன் பாவிகளுக்குச் சிலுவை மற்றும் சபையின் மூலமாக இரட்சிப்பு என்பதை உலகத் தோற்றத்திற்கு முன்பே திட்டமிட்டார். எனவே, தனிச் சிறப்பான அந்தக் கருத்தில், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது. பவுல், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ. 3:15) என்று எழுதினார்.

படைப்பிற்கு முன்பாகவே தேவன், ஆவிக்குரிய வீடாகிய சபையின் பிரதான மூலைக் கல்லாக - தேர்ந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாகிய கல்லாக - இருக்கும்படிக் கிறிஸ்துவைத் தேர்ந்து கொண்டார் (1 பேது. 2:6). பேதுரு, "அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து" (1 பேது. 1:20) என்று எழுதினார். காலத்திற்கு முன்பே, தேவன் தம் செய்தியாளர்களாயிருக்கும்படியும் தம் நாமத்தை மகிமைப்படுத்தும்படியும் தூதர்களைக் கூடத் தேர்ந்து கொண்டார் (1 தீமோ. 5:21).

நித்தியத்தில், தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு நம்பிக்கை அளிக்க ஒரு வழியை இயற்றினார், மற்றும் அவர் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக வாக்குறுதியும் அளித்தார். தீத்துவுக்குப் பவுல், "பொய்யுரையாத தேவன் ஆதி கால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி ..." (தீத்து 1:3) என்று எழுதினார். இவ்வசனத்தின் இரண்டாம் சொற்றொடரானது "ஆதி கால முதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மனிதர் அறிந்துள்ள வற்றிலேயே மிகப் பழைய வாக்குத்தத்தமாக உள்ளது. இயேசு நிறைவேற்றிய ஒப்புரவாக்கும் பலி, மற்றும் அந்தப் பலியை எவ்வாறு பெறுவது போன்ற இரட்சிப்பின் திட்டத்தினுடைய விபரங்கள், முதல் புல்லிதழை, முதல் கல்லை, வெளிச்சத்தின் முதல் கதிரை அல்லது பனியின் முதல் துளியைத் தேவன் படைக்கும் முன்பாகவே அவருடைய சிந்தையில் திட்டமிடப்பட்டன. தேவன், "நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதி கால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த

*அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ. 1:9) என்று பவுல் கூறினார்.*

*சபையை வடிவமைப்பதற்குச் சிலுவையில் கிறிஸ்து அடைந்த மரணத்திற்கு மனிதனின் பதில்செயல் என்பதே தேவனுடைய மீட்பின் அளிப்பிற்கு மைய சத்தியமாக உள்ளது (அப். 20:28; எபே. 5:25). கிறிஸ்து வின் மூலம் தேவன் செயல்படுவதாயிருந்த அவரது நித்திய நோக்கத்தின் பாகமாக சபை என்பது அவருடைய சிந்தையில் இருந்தது என்று பவுல் கூறியதில் வியப்பெதுவும் இல்லை: "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கு அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ..." (எபே. 3:9, 10).*

*வேதாகம சரித்திர இடங்களில் சுற்றுப்பயணிகளைக் கவருவதாக யாக்கோபின் கிணறு நன்கு அறியப்பட்டுள்ளது. இயேசு சமாரியாவின் வழியாகக் கடந்து சென்ற பொழுது, யாக்கோபின் கிணற்றண்டையில் ஓய்வெடுத்தார் என்று யோவான் கூறினார் (யோவா. 4:6). யாக்கோபு, பதான் அராமில் இருந்து சீகேமுக்குத் திரும்பி வந்த வேளையில், அவர் சீகேமின் கிழக்குப் பகுதியில் முகாமிட்டு, தாம் முகாமிட்ட நிலத்தை விலைக்கு வாங்கினார் (ஆதி. 33:18, 19). அங்கு யாக்கோபு ஒரு கிணற்றை வெட்டினார் என்று பழைய ஏற்பாடு எவ்விடத்திலும் நமக்குக் கூறவில்லை யென்றாலும், அவர் அவ்வாறு செய்தார் என்பது புதிய ஏற்பாட்டின் காலம் வரையிலும் நீடித்து நிலைத்து நின்ற, ஏவப்படாத பாரம்பரிய வரலாறாக உள்ளது (யோவா. 4:12). இவ்விடத்திற்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கில் பயணிகள் வந்து, மிகப் பழைய கடந்த காலத்தைத் தியானிப்பதுடன், அக்கிணற்றின் முனையில் தேவகுமாரனாகிய இயேசு, சமாரியாவிலிருந்து வந்த பெண்ணுடன் நடத்திய உரையாடலைப் பற்றியும் தியானிக்கின்றனர். பயணிகள் இந்தக் கிணற்றண்டையில் நின்று கொண்டு, யோவான் 4ஆம் அதிகாரத்தை வாசிக்க விரும்புகின்றனர். மற்றும் அவர்கள், அக்கிணற்றுக்கு அப்பால் மூவாயிரம் அடிகள் தூரத்தில் உயர்ந்து நிற்கும் கெரிசீம் மலையை நோக்கிப் பார்த்து, அந்தச் சமாரியப் பெண்ணின் வார்த்தைகளையும் நமது இரட்சகரின் பதிலையும் நினைத்துப் பார்க்க விரும்புகின்றனர். அவள்,"எங்கள் பிதாக்கள் இந்த மலையில் தொழுது கொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்தில் தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள்" (யோவா. 4:20). இதற்குப் பதிலுரையாக இயேசு, "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங் காலம் வருகிறது" (யோவா. 4:21) என்று உரைத்தார்.*

*புகழ் பெற்ற இக்கிணற்றின் பட்டப் பெயரான "யாக்கோபின் கிணறு" என்பது இதைப் பற்றி என்ன கூறுகின்றது? இதன் தொடக்கம் பற்றிய உறுதியான குறிப்பொன்று இதன் பட்டப் பெயரினால் ஏற்படுத்தப் படுவதாக உள்ளது. அந்தக் கிணறு எப்படி உண்டாயிற்று அல்லது தொடக்கத்தில் யார் அதைப் பயன்படுத்தினார் என்பது பற்றிய சில விபரங்களை இந்தப் பட்டப்பெயர் நமக்குக் கூறுகின்றது. இது, இஸ்ரவேல்*

என்று பெயர் மாற்றப்பட்ட முற்பிதாவும், இஸ்ரவேலர்களின் முற்பிதாவுமான யாக்கோபு என்பவர் அக்கிணற்றைத் தோண்டச் செய்திருந்தார் அல்லது தோண்டினார் என்ற பழங்காலப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்றது. அவர் தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் ஆட்டு மந்தைகளுக்கும் மற்றும் மாட்டு மந்தைகளுக்கும் அக்கிணற்றிலிருந்து தண்ணீர் இரைத்தெடுத்திருந்தார். இவ்விதமாக, பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும், இக்கிணறானது மாபெரும் முற்பிதாவான யாக்கோபின் வாழ்க்கைக்குச் சாட்சியாக இன்னும் நிலைநிற்கின்றது.

சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது. இது தேவனுடைய ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றின் படைப்பாக உள்ளதே தவிர, மனித சிந்தனை அல்லது வடிவமைப்பின் கண்டுபிடிப்பாக இருப்பதில்லை. "தேவனுடைய சபை" என்ற சொற்றொடரைப் பரிசுத்த ஆவியானவர் பிழையற்ற, சரியான தன்மையுடன் பயன்படுத்தினார் என்றும், அது புதிய ஏற்பாட்டை வாசிப்பவர்களால் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டிருந்தார் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். இது கருத்தற்ற சொற்றொடராயிருப்பதில்லை; இது ஒரு இடம் நிரப்பியாக இருப்பதில்லை; இது சபையைப் பற்றிய சத்தியமாக உள்ளது. சபையானது தனக்குப் பின்னும், தன்னுள்ளும் தேவனைக் கொண்டுள்ளது. தேவன் இந்த உலகத்திற்குச் செய்துள்ளவற்றினுள் ஒருவர் அங்கமாய் இருக்க விரும்பினால், அவர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாகத் தம்மை தேவன் அவருடைய தெய்வீகமான சபையில் இணைத்துக் கொள்ளும்படி அவரை (தேவனை) அனுமதிப்பார்.

## இதன் உரிமைத்துவத்திற்குள்ளாக

இரண்டாவது, "தேவனுடைய சபை" என்ற இயற்பெயரானது சபையின் உரிமைத்துவம் பற்றிய உட்கருத்தை அளிக்கின்றது. இது - சபை தேவனுக்குரியது என்ற - உரிமைத்துவத்தின் கருத்தைத் தெரிவிக்கின்றது.

எபேசுவில் இருந்த மூப்பர்களுக்குப் பவுல், "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப். 20:28) என்று புத்தி கூறினார். மேலும் அவர் கொரிந்துவில் இருந்த சபையாருக்கு, அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபை ..."யாக இருந்தனர் (1 கொரி. 1:2) என்றும் எழுதினார். ஆம், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது.

இருப்பினும், இயேசுவும் கூட, "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18) என்று உரைத்தார். கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை விலையாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்ற வகையில், சபையானது உண்மையில் கிறிஸ்துவுக்கு உரியதாக இருக்கின்றது (அப். 20:28). ஆகையால் பவுல்,

சபையை கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிட்டார் (ரோமர் 16:16).

ஆகையால், ''தேவனுடைய சபை'' என்ற சொற்றொடரானது தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் உள்ள சபையின் உடன் உரிமைத்துவத்தின் வகையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இயேசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோவா. 10:30) என்று உரைத்தார்; "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்" (யோவா. 6:65); மற்றும், "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (யோவா. 14:20) என்றார். பரலோகத்தில் இருக்கிற பிதாவானவர் உலகத்தின் இரட்சிப்புக் குத் திட்டமிட்டார்; குமாரனாகிய இயேசு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு பூமிக்கு வந்தார். ஆகையால் ஒரு கருத்தில், சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது; இன்னொரு கருத்தில் சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. சபையைப் பற்றிய முழு சத்தியத்தைப் புரிந்து கொள்ள இவ்விரு உண்மைகளும் தேவைப்படுகின்றன.

''தேவனுடைய சபை'' என்ற சொற்றொடரில் வெளிப்படுத்தப் பட்டுள்ள உரிமைத்துவத்தின் உண்மையானது ஆதி. 32:24-32ல் உள்ள நன்கறியப்பட்ட பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சியொன்றினால் விவரிக்கப் படுகின்றது. "யாக்கோபு" என்றால் "எத்தன்" என்று அர்த்தப்படுகின்றது, அது அப்பெயர் கொண்டவரின் வாழ்வின் முதல் பகுதிக்குப் பொருத்தமான தாகவே இருந்தது. யாக்கோபு பழைய ஏற்பாட்டில் முதன் முதலாகத் தோன்றுகையில், தன் வாழ்வில் பின்வரும் அறிவிப்பைக் கொண்டவராய் இருந்திருக்க முடியும்: "நான் இப்பொழுது இருக்கும் நிலையைக் கொண்டு என்னைப் பற்றி முடிவு செய்து விடாதீர்கள், ஏனெனில் தேவன் இன்னும் முழுமையாய் எனக்குள் செயல்படவில்லை!" தேவன் யாக்கோபை மாற்றி, அந்த மாற்றத்தின் தொடக்கமாக அவருக்கு "இஸ்ரவேல்" என்ற பெயரைக் கொடுத்தார்.

யாக்கோபுக்கு யாப்போக்கு ஆற்றின் கரையில் தூதனுடன் அவர் இரவு முழுவதும் யுத்தம் செய்த நிகழ்ச்சியானது அவரது மாற்றத்திற்குப் பங்களித்தது. யாக்கோபு தனிமையில் இருந்த வேளையில், ஒரு மனிதன் (போலக் காணப்பட்ட தூதன்) அவரிடம் தோன்றி, அவருடன் யுத்தம் செய்யத் தொடங்கினார். அவரை அழிந்து போகும் மனிதன் என்று எண்ணிய யாக்கோபு தீர்மானத்துடன் கடின யுத்தம் செய்தார். பொழுது விடிகின்ற நேரத்தில், அடையாளம் காணப்படாத அம்மனிதர் யாக்கோபின் தொடைச் சந்து நரம்பைத் தொட்டு அதைச் சுளுக்கிப் போகச் செய்தார். யாக்கோபிடம் அந்த அந்நியர், "நான் போகட்டும், பொழுது விடிகிறது" என்றார். யாக்கோபு, ஒருவேளை இப்பொழுது தன்னுடன் போராடியவர் தெய்வீகமானவர் என்பதை உணர்ந்ததால் "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றார்." தூதன் அவரிடம் "உன் பேர் என்ன?" என்று கேட்டார். யாக்கோபு பதில் அளித்த பொழுது, அவருக்கு, "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" என்று கூறப்பட்டது (ஆதி. 32:28).

பரலோகத்திலிருந்து வந்தவர், நினைவுகூரத்தக்க அந்த இரவில் யாக்கோபை ஆசீர்வதித்த பிறகு, மறைந்து போனார். இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பானது யாக்கோபுக்குச் சாட்சியமாக அமைந்ததால், அவர் அந்த இடத்திற்கு "தேவனுடைய முக (தரிசனம்)" என்று அர்த்தப்படும் பெனியேல் என்று பெயரிட்டார். அவ்விடத்திற்கு அவர் இப்பெயரைத் தேர்ந்து கொண்டார், ஏனென்றால் அவர், "தேவனை முகமுகமாய்த் தரிசித்து" இருந்தார், இன்னமும் அவரது வாழ்வு பாதுகாக்கப்பட்டிருந்தது (ஆதி. 32:30).

இதே போன்றதொரு தரிசனமானது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வர வேண்டும். சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது; இது தேவனுக்கு உரியதாகும். நாம் சபைக்குள் பிரவேசிக்கும் பொழுது, தேவனால் உரிமை கொள்ளப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு இடத்தினுள் இருக்கின்றோம். உருவக நடையில் கூறுவதென்றால், சபையில் நாம் தேவனை முகமுகமாய்த் தரிசிக்கின்றோம்.

---

*தேவன் சபையின் பிதா, தோற்றுவித்தவர்,*
*ஜீவனுள்ள வல்லமை, பாதுகாப்பாளர், ஆறுதல் அளிப்பவர்*
*மற்றும் ஆளுபவர் என்று கூறப்படலாம்.*

---

கிறிஸ்துவின் சபை என்ற வகையில், நாம் தேவன் இருக்கும் இடத்தில் இருக்கின்றோம். தேவன் நமக்குள் வாசம் பண்ணி நம்மை வழிநடத்து கின்றார். சபையானது தன்மேல், தேவனுடைய உரிமைத்துவத்தின் முத்திரையைக் கொண்டுள்ளது. அவரது கையெழுத்து அழிக்கப்பட்டு, மனிதரின் உரிமைத்துவத்தினுடைய முத்திரை அதனிடத்தில் இடப்பட்டால், மாபெரும் துன்பம் நிகழும் - சபையானது தேவனுடைய சபை என்ற ஆவிக்குரிய வாசஸ்தலமாக இல்லாமல், மனிதருடைய உயிரற்ற சபையாகின்றது.

## இதன் தொடர்ந்த வாழ்விற்குள்ளாக

மூன்றாவதாக, "தேவனுடைய சபை" என்பது, சபை தொடர்ந்து இருக்கப் போகின்ற உட்கருத்தை நமக்குக் கொடுக்கின்றது. தேவன் தம்முடைய சபையைப் பெலப்படுத்துகிறார். சபையை அவர் படைத்தது, மற்றும் அதன் மீதான அவருடைய உரிமைத்துவம் ஆகியவற்றின் காரணத் தினால், தேவன் சபையின் வாழ்விற்குப் பொறுப்புள்ளவராக இருக்கின்றார்.

கொரிந்துவில் இருந்த சபையாருக்குப் பவுல் தம் வாழ்த்துதலில், தேவனை கிருபை மற்றும் சமாதானத்தின் ஆதார மூலமாகச் சித்தரிக் கின்றார்: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (1 கொரி. 1:3). மற்றும் அவர், கிறிஸ்தவர்கள் தேவனால், "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு" (1 கொரி. 1:9) அழைக்கப்பட்டுள்ளனர் என்றும்

கூறினார். நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்பட்ட வகையில் நம்மைத் தேவன் தம்முடைய பிள்ளைகளாகச் சுவிகரித்துக் கொண்டார் (எபே. 1:5). இதன் விளைவாக, சபை என்பது புதிய ஏற்பாட்டில் தேவனுடைய குடும்பமாக அறியப்பட்டுள்ளது (1 தீமோ. 3:15). இதனால், கிறிஸ்தவர்கள் தேவனுடனான தங்கள் அன்றாட நடையில், "தேவனுடைய ஜீவனில்" பங்கேற்கின்றனர். புறஜாதியார் தங்கள் சிந்தை மற்றும் வாழ்வின் அக்கிர மங்களினாலே "தேவனுடைய ஜீவனிலிருந்து" தங்களை அந்நியப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று பவுல் எபேசியருக்குக் கூறினார் (எபே. 4:18). தேவன் சபையின் பிதா, தோற்றுவித்தவர், ஜீவனுள்ள வல்லமை, பாது காப்பாளர், ஆறுதல் அளிப்பவர் மற்றும் ஆளுபவர் என்று கூறப்படலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, எனது இல்லத்திற்கு அருகில் இருந்த ஒரு நகரில் நான் ஒரு வார காலம் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். சபையின் உறுப்பினர்கள் சிலரை நான் சந்திக்கையில், ஒரு மனிதர் சில ஆண்டுகளுக்கு முன்பு தம் வேலையின் தொடர்பாகத் தாம் பெற்றிருந்த அனுபவத்தைப் பற்றி என்னிடம் கூறினார்.

அவர் ஒரு சேவை நிலையத்தின் மேலாளராயிருந்தார். அவரிடத்தில் ஒருநாள், அந்த சேவை நிலையத்தின் உரிமையாளர் வந்து, ஞாயிற்றுக் கிழமைகளிலும் சேவை நிலையத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அந்த உரிமையாளரிடத்தில் இவர், "நான் ஒரு வேலையாள் என்ற வகையில் உங்களுக்காக ஆறு நாட்கள் வேலை செய்வேன் மற்றும் என்னால் முடிந்த அளவு சிறப்பாக உங்களுக்காகப் பணியாற்றுவேன், ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் உங்களுக்காக நான் பணியாற்ற இயலாது. ஞாயிறுகாலை மற்றும் மாலை வேளைகளில் ஆராதிப்பதென்று நான் உறுதி கொடுத்துள்ளேன். அந்த உறுதியில் இருந்து நான் பின்வாங்க இயலாது" என்று கூறினார். அந்த உரிமையாளார், "அப்படியானால் நான் ஒரு புதிய மேலாளரைப் பணியமர்த்த வேண்டி யிருக்கும். இன்னும் ஓரிரண்டு நாட்களில் உங்களுக்கு எனது முடிவைத் தெரிவிப்பேன்" என்று கூறினார்.

கிறிஸ்துவுக்குள்ளான இந்த சகோதரர், தனது வேலையை இழந்து விட்டால், தான் என்ன செய்வது என்று அறியாதிருந்தார். அது ஒன்றும் உயர்ந்த ஊதியம் அளிக்கும் வேலையல்ல, ஆனால் அவ்வேலை மட்டும் தான் அவரது குடும்பத்திற்கான வருமானத்தின் ஆதார மூலமாக இருந்தது. தேவனிடத்தில் ஜெபித்து, அவர் சிறந்ததென்று விரும்புவதைச் செய்யும்படி அவரிடத்தில் கேட்பது என்பதை மட்டுமே தாம் அறிந்திருந்ததாக இந்த சகோதரர் கூறினார். இரண்டு நாட்களுக்குப் பின் அவரிடம் வந்த உரிமையாளர், "இந்த சேவை நிலையமானது ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்; ஆனால் அவ்வாறு செய்தால், இனியும் உங்களை எனது மேலாளராகப் பயன்படுத்த இயலாது. நான் பெற்றிருந்துள்ள பணியாளர்களிலேயே மிகச் சிறந்தவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கின்றீர்கள், (எனவே) நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சேவை நிலையத்தைத் திறந்து வைப்பது என்ற கருத்தை மறந்து விட முடிவு செய்துள்ளேன், இதனால் நான் உங்களை எனது மேலாளராகத் தொடர்ந்து

வைத்துக் கொள்ள முடியும்" என்று அவரிடம் கூறினார். "ஊக்கப்படுத்தும் இச்செய்தியை நான் கேட்ட பின்பு, அமைதியாக என் இருதயத்தில் மத்தேயு 6:33ஐக் கூறிக் கொண்டேன்: 'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்' " என்று இந்த சகோதரர் கூறினார்.

விசுவாசத்தின் இம்மனிதர், "தேவனுடைய சபை" என்ற வார்த்தைகளில் உள்ள பிடிப்புறுதியான சத்தியத்தை நடைமுறையில் உணர்ந்து அறிந்திருந்தார். தேவன் தமக்குச் சொந்தமானவற்றைக் கவனித்துக் கொள்ளுகின்றார். அவர் தமது குடும்பமாகிய சபையைப் பாதுகாத்து, ஆசீர்வதித்து, அன்புகூர்ந்து மற்றும் பாதுகாக்கின்றார்.

சபையானது தெய்வீகமானதாக உள்ளது மற்றும் இது இயல்பாகவே, தேவனுடைய மகிமைக்கென்றே எல்லாவற்றையும் செய்யும்படியாகக் கட்டுவிக்கப்படுகின்றது. இது தேவனுடைய அன்பினாலும் கிருபையினாலும் பாதுகாக்கப்படுகின்றது. இது தேவனுடைய வல்லமைமிக்க கரத்தினால் பாதுகாக்கப்படுகின்றது, மற்றும் தனது அன்றாட ஆவிக்குரிய நிலைத்திருத்தலுக்கும் தனது நித்தியமான எதிர்காலத்திற்கும் இது தேவனையே சார்ந்துள்ளது.

## முடிவுரை

எனவே, தேவன் புதிய ஏற்பாட்டின் சபையுடன் ஒரு விசேஷித்த உறவைக் கொண்டுள்ளார் என்பது தெளிவு. இதன் வருகையைக் காலத்திற்கு முன்பே அவர் திட்டமிட்டார், இதை அவர் உரிமை கொண்டுள்ளார், மற்றும் இதற்குள்ளாக அவரே ஜீவனைப் பாய்ச்சுகின்றார். அவர் சபைக்கு அன்பையும், தலைமைத்துவத்தையும் மற்றும் ஜீவனையும் அளிக்கின்றார். அவருடைய கிருபை மற்றும் மகிமையின் ஒளி வெள்ளமானது சபையிலிருந்து கதிர் வீசுகின்றது. அவருடைய சபையின் உறுப்பினர்கள் அவரது வசனத்தின் வழிநடத்துதல் மூலமாக அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்கேற்கின்றனர் (2 பேது. 1:3). சபை என்பது அவருடைய குடும்பமாய் உள்ளது மற்றும் இது நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய அவருடைய திட்டத்துடன், நித்திய திருமணம் போன்றதொரு பந்தத்தில் பிணைக்கப்பட்டுள்ளது.

ஒரு கருத்தில், தேவனுடைய சபைக்குப் புறம்பே இருக்கின்ற எவரொருவரும் தேவனை விட்டுப் புறம்பேயும் தொலைவிலேயும் உள்ளனர். சபையானது தேவனுடைய அரியணையுள்ள நித்திய வாசஸ்தலத்திற்குக் கொண்டு சேர்க்கப்படும் வரையிலும் அவர் தம் பாதுகாக்கும் கரத்தினால் எல்லாத் துன்பங்களில் இருந்தும் சபையைக் காத்து நிற்கின்றார். தேவன் தமது தெய்வீக அருளிரக்கத்தினால் தேவன் தாம் விரும்புகின்ற வரையிலும், அவர் நம்மிடம் செய்யும்படி கேட்டுக் கொண்டவைகளைச் செய்வதற்குத் தேவையானவற்றைத் தம்முடைய சபைக்கு அன்புடன் வழங்குகின்றார்.

1 சாமுவேல் 17ல் தாவீதைப் போல, சபையானது எதிர்கால எதிரிகள் யாவரையும் தேவனுடைய பலத்தால் எதிர்கொள்ளுகின்றது. இஸ்ர

வேலரும் பெலிஸ்தரும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இருபுறப் படைகளும் தங்களின் மிகச் சிறந்த மனிதன் ஒருவனை அனுப்பி, அவ்விருவரும் கை கலப்பு யுத்தத்தில் போட்டியிட்டு, யுத்தத்தில் ஜெயிப்பவரின் இனமானது யுத்தத்தில் வெற்றியைப் பெற்றதென்று கருதப்பட வேண்டியதாய் இருந்தது. பெலிஸ்தருக்குள் அவர்களின் மனிதன் - ஒன்பதரை அடி உயரமும், அவ்வுயரம் கண்டு இஸ்ரவேலரில் எவரும் அனுப்பப்படுவதற்கு மிகவும் அஞ்சப்படத்தக்க அரக்கன் - ஒருவன் இருந்தான். பயத்தில் மூழ்கியிருந்த இஸ்ரவேலர்கள் என்ன செய்வது என்று அறியாமல் இருந்தார்கள். இது, வாழ்வின் மாபெரும் யுத்தத்தின் பதுங்கு குழிகளில் தேவனுடைய மக்கள் தேவனுடைய வல்லமையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று இஸ்ரவேல் மக்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்பதைத் தாவீதுக்கு நினைவூட்டியது.

தாவீது இஸ்ரவேலின் படைமுகாமிற்கு வந்து, கர்த்தருடைய வல்லமையுடன் கோலியாத்தை எதிர்கொள்வதற்கு தாமே முன் வந்தார். அவர் தேவனுடைய மனிதனாய் இருந்தார், மற்றும் அதை அவர் அறிந் திருந்தார். அவர் தேவனுடைய ஐக்கியத்தில் நடந்து தேவனுடைய வாக்குத் தத்தத்தில் பங்கேற்றார். தேவன் தம்முடைய படைக்குப் பொறுப்பாளியாய் இருப்பதையும், தேவனுடைய படைவீரர்கள் தேவனுடைய பலத்துடன் யுத்தத்திற்கு அணி வகுத்துச் செல்ல வேண்டியதையும் அவர் அறிந்தார். தாவீது கோலியாத்தை அணுகிய வேளையில், அவர் (தாவீது) தம்மைப் பற்றிய ஆபாசமான அவமானங்களை ஜீவனுள்ள தேவன் மேல் கொண்ட விசுவாசத்தின் உறுதிப்பாட்டுடன் சந்தித்தார். அவர், “நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனை களுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்” (1 சாமு. 17:45, 46a) என்று கூறினார். அந்த நாளில் கர்த்தர் தாவீதுடன் இருந்தார், மற்றும் கோலியாத் தாவீதின் கவணினாலும் கர்த்தருடைய பலத்த புயத்தினாலும் கோலியாத்தை மரணமடையச் செய்தார்!

இஸ்ரவேலுக்கும் தாவீதுக்கும் தேவன் என்னவாக இருந்தாரோ, அவ்வாறே தேவன் சபைக்கும் இருக்கின்றார்! சபை என்பது தேவனுடைய சபையாக உள்ளது, அது அவருடைய வல்லமை, கனம், ஞானம் மற்றும் ஜீவன் ஆகியவற்றால் நிரப்பப்பட்டுள்ளது!

ஒருவர் புதிய ஏற்பாட்டின் சபைக்குள்ளாக வரும் பொழுது, அவர் தேவனுடைய தெய்வீக வாழ்வின் வட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கின்றார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குரியவர்களாய் இருப்பதோடு மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் மூலம் அவர்கள் தேவனுக்குரியவர் களாகின்றனர். தேவனுக்குள் அவர்கள் வெற்றிக் கொள்ள முடியாத, மறுக்கப்பட முடியாத, ஒப்பிடப்பட முடியாத ஜீவனுள்ள தேவனுடைய சபையாக இருக்கின்றனர்!

குறிப்பு

[1]அப். 20:28; 1 கொரி. 1:2; 10:32; 11:22; 15:9; 2 கொரி. 1:1; கலா. 1:13; 1 தீமோ. 3:5. ''தேவனுடைய சபைகள்'' என்பது புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள் வருகின்றன: 1 கொரி. 11:16; 1 தெச. 2:14; 2 தெச. 1:4; "ஜீவனுள்ள தேவனுடைய சபை" என்பது ஒருமுறை வருகின்றது: 1 தீமோ. 3:15.

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. எந்த ஒரு பொருளையும், இடத்தையும் அல்லது நபரையும் நீங்கள் குறிப்பிட முடியாத ஒரு உரையாடலை ஒன்று படுத்தவும்.
2. தேவன் எப்பொழுது மனிதனுக்கு மொழியைக் கொடுத்தார்?
3. குறிப்பிடுவதற்கான திறமையானது செயல்வலிவான செய்தித் தொடர்புக்குப் பங்களிக்கின்றதா?
4. புதிய ஏற்பாட்டில் ''தேவனுடைய சபை'' என்ற சொற்றொடரானது எவ்வளவு அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றது?
5. சபையைத் தேவன் எப்பொழுது திட்டமிட்டார்?
6. சபையின் மீது தேவன் உரிமையுள்ளவராய் இருக்கிறார் என்று நீங்கள் எந்தக் கருத்தில் கூற முடியும்?
7. கிறிஸ்துவும் சபையின் மீது உரிமையுள்ளவராய் இருக்கின்றாரா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
8. சபையை மாற்றியமைக்க எந்த மனிதருக்கும் உரிமை உள்ளதா?
9. சபையின் ஜீவனுக்கான வல்லமையைத் தேவன் எவ்வாறு தருகின்றார்?
10. அரக்கனை அழிக்கத் தாவீது எந்த வல்லமையைப் பயன்படுத்தினார்?
11. சபைக்குப் புறம்பே உள்ள மக்கள் பெற்றிராத வல்லமைக்கான வழியை சபையில் உள்ள மக்கள் பெற்றிருக்கின்றார்களா?